உளி- 1 | ஓசை-75 | ஜூலை-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

கோ.லீலா -4
மஹ்றா பர்வீன் -5
நெல்லை. க.சோமசுந்தரி -6
கா.ந. கல்யாணசுந்தரம் -6
யாழினி -7
சகா -8
ரத்னா -9
கதிரிளவன் இரவிக்குமார் -10
க.ராஜகுமாரன் -11
ரத்னாவெங்கட் -11
ஆ.சார்லஸ் -12
ஜனனி -12
நா.கி.பிரசாத் -13
காயத்ரி ராஜசேகர் -13
மழைக்குருவி -14
ச.ஆனந்தகுமார் -14
தங்கேஸ் -15
பூங்கோதை கனகராஜன் -16
க. அய்யப்பன் -16
சே கார்கவி கார்த்திக் -17
நேசன் மகதி -17
நரேன் -18
வானதி சந்திரசேகரன் -19
சந்துரு ஆர்.சி -20
ஹபி -21
நிஷா ராஜேஷ் -22
இனியவன் காளிதாஸ் -23
யாழ் தண்விகா -24
மகேஷ் சிபி -24
செ.புனிதஜோதி -25
சுசித்ரா மாரன் -26
சீ. பாஸ்கர் -27
அ.ராஜ்குமார் -27
Dr ஜலீலா முஸம்மில் -28
செ.வீரமணி -29
பிரபுசங்கர் க -30
மா. காளிதாஸ் -31
பிரியா பாஸ்கரன் -32
கதிரவன் வீ -32
கா வெங்கடேஸ்வரன் -33
மு.முபாரக் -33
அ.சீனிவாசன் -34
நித்யா -35
மூக்கையா மணி திருமுருகன் -36
முத்து ஜெயா -37
ஷர்ஜிலா பர்வீன் யாகூப் -37
வானம்பாடி -38
யாழ் எஸ் ராகவன் -39

# நகரத்தின் இரவு



கண்கூசும் வண்ண
வண்ண மின்விளக்குகள்
நட்சத்திரங்களின் பேரழகை
புறக்கணித்து கண்சிமிட்ட
கழற்றி வீசப்பட்ட சேலையில்
மினுங்கும் கல்லென எனைப்
பார்த்து கண்சிமிட்டி ஓரமாய்
பார்ப்பற்று கிடந்தது வானச் சேலை..

இரவின் ஆடை இருளென்றே
மின்னும் நட்சத்திரங்கள் மூலம்
அறிந்த காட்டுவாசி எனக்கு
தரை முதல் வான்வரை
வண்ண விளக்குகளால்
உடை களையப்பட்ட இரவின்
பளீரிடும் அம்மணத்தில்
காட்சியான ஏற்றத்தாழ்வுகள்
ரசிக்கத் தக்கதாய் இல்லை...

இருளின் ஆடைக்குள் மட்டுமே
சமத்துவம் கண்டு நிம்மதியுறும்
ஒருவனின் கேவலில்
விளக்குகள் சர்வாதிகாரிகளென
மினுங்கி மேலும் ஒளிர்ந்தன...

மெல்ல நிமிர்ந்துப் பார்த்தேன்
கண்களால் சேலையை மீட்டெடுத்து
காட்டிடமே ஒப்படைத்தேன்
ஒப்பனையற்ற இரவுக்கு
இருளை உடுத்திவிட்டது காடு
மீண்ட இரவோடு கைகுலுக்கின
மின்மினிப் பூச்சிகள்...

புதையல்களின் சுவராசியம்
அறியாதவர்களிடமிருந்து
மீட்டுக்கொண்டேன்
என் இரவை ஆடையோடு

ஆம் ! நானொரு காட்டுக்காரி...
காடுகளின் இரவு ஒரு சமத்துவாதி!

◇ **கோ.லீலா**



கூட்ட நெரிசலோடு
விரைவாய் ஓடும் பேருந்தில்...

கூடு திரும்பிய பறவையின் முகத்தோடு
அமர இடம் கிடைத்த சந்தோசத்தில் பலரும்..
நல்லவேளை வண்டிய பிடிச்சிட்டோம்னு சந்தோசத்தில்
சிலரும்...

வாரம் கடந்த பாரி
தலைய தூக்குன மாதிரி...
மேட்டுக் கரையில ஆளுக இறங்கிடும்னு எதிர்பார்பில்
இன்னும் சிலர்...

எண்ணெய்ய கக்குற பலகாரத்து பொட்டலம் மாதிரி....
ராத்திரிக்கூட பேசுனாரே
இப்படியா சாவு வரணும்னு
வாயடச்சு கண்ணுல நீரத்தேக்கி ஒரு சிலர்....

கொடியில கிடந்தாலும்
கைய கால ஆட்டுற துணிமணிக மாதிரி....
நாளு தள்ளிப் போன சந்தோசத்த
ஊருக்காட்டுல சொல்லித் தீர்க்க
நெஞ்சு முட்ட ஆசையோட ஒருத்தி...

கோடங்கி வாக்கயே
தெய்வ வாக்கா மதிக்கிறவ...
நேருல போயிக் கேட்டா
மறுக்காம கடன் கொடுப்பாகனு
முழு நம்பிக்கைய மூட்டையா சுமந்து வாரா...

நல்ல காரியமானாலும்
கொஞ்சமா சோகத்த அப்பி ...
இந்த இடமாவது நல்லபடியா அமையனும்னு
மனசுல வேண்டுதலோட சிறு கூட்டம்...

பல கனவுகளோடு ஓடுற வண்டியில...
தாய் மடியில அமர்ந்து வேடிக்கை பார்க்குற
குழந்தையோடு குழந்தையாய் ...

நீங்களோ ....
நானோ .... கனவுகளையெல்லாம் மறந்து
இந்த மனித முகங்களை ரசித்திருக்கலாம் ...

◇ **மஹறா பர்வீன்**

# ஹைக்கூ



1.அடர் இருட்டிலும்
நம்பிக்கை இழக்கவில்லை
மின்மினிப் பூச்சி!

2. குளத்தில் மிதந்தபடி
விண்ணை மறைக்கிறது
ஆகாயத்தாமரை !

3. கோவில் கற்சிலை
சிரித்தபடி இருக்கிறது
செவ்வரளி பூக்கள்!

4..வேப்பங் காற்று
நினைவை மீட்டுகிறது
மரத்தடி பள்ளி !

◇ **நெல்லை. க.சோமசுந்தரி**

ஒத்துழைக்க மறுத்த இதயம்
உடன்படுகிறது
அறுவை சிகிச்சைக்கு

◇ **கா.ந. கல்யாணசுந்தரம்**

# பூமரம்



பார்த்திராத பூமியின் பக்கத்தில்
முளைத்துவிட்ட எளிய தாவரம் அது
பருவங்களைப்பற்றி விவரணை
என்றும் அதற்கு இருந்ததில்லை
மழையும் காற்றும் சற்று அதிகமாகவே
அதைச்சீண்டும்
தேவையின் பொருட்டு
அனுமதிக்கப்பட்ட அளவில்
வெய்யில் நலம் விசாரிக்கும்
பார்க்காதற்கோ
பறிக்காதற்கோ
கவலை இருப்பதாய் தெரியவில்லை
குறைந்த பட்சமாய்
அப்பூரமத்திற்கு
நீங்கள் பெயராவது
வைத்திருக்கலாம்.

◇ யாழினி



முன்னால இருக்குற ரூம்லயிருந்து
தாத்தாவின்
பாழாய்ப்போன காசநோயின்
இருமச்சத்தம் கேக்குது...
தெக்க உள்ள மூலையில உக்காந்து
பாட்டி வெத்தல இடிக்கிற சத்தம் கேக்குது...
ஏம்ப்பா மாட்டுக்கு
தண்ணி காட்டியாச்சா,
ஏய் அந்தப்பக்கம் போகாதீங்க
அங்க அடசலா இருக்கும்,
எல்லோரும் சாப்புட வாங்கன்னு
கூப்பிடும் அம்மாவின் குரல் கேக்குது...
அக்கா கல்யாணத்துக்கு
கட்டுன குழாய் ரேடியாவுல இருந்து
“அன்னக்கிளியே ஒன்னத்தேடுதே”
கேக்குது...
இவுங்கள எல்லாம்
அன்பால அடக்குமுறை செய்யுற
அப்பாவோட சத்தம் மட்டும்
ச்சட்டத்தின் புடியில சிக்கி
ஆடிக்கிட்டிருக்கிற
கண்ணாடிக்குள்ளயிருந்து
கேட்டுக்கிட்டிருக்கு
“எல்லாரும் ஒத்துமையா இருங்கன்னு”

◇ சகா



இப்பொழுதெல்லாம்
என் காதலின் சிறகுகளை இறுக பிடித்து வைப்பதை
நிறுத்திக் கொண்டேன்...

எத்தனை சிரமங்களை கொடுத்திருக்கிறேன்
அச்சிறகுகளுக்கு...

எனக்கான அழகான உலகத்தை காட்டியதும் அச்சிறகு
தான்....

என்னை அவ்வப்போது அழ வைப்பதும் அச்சிறகு
தான்...

இலகுவாக சிறகு விரிக்கட்டும்
எவ்விடம் வேண்டுமானாலும்,

இளைப்பாறுதல் என்னிடம்
கொள்ளட்டும் அச்சிறகுகள்...

இச்சிறகுகள் பக்குவத்தில் பயணிக்கிறது
காதலோடு....

◇ **ரத்னா**



கைக்கிளைக் காரனுக்குத்தான் தெரியும் அந்த
நாயின் அருமை
ஏக்கங்களில் கிடைக்காத எச்சில் முத்தங்களை
இடம் பொருள் தெரியாமல் ஈந்திடும் பொழுதுகளில்,
தனக்குப் பிடித்தோருக்காக ஓடி உதவி அலுத்த
மேல் வலியில்
தனக்கென்று அரவணைக்க ஆள் இல்லை
என்று ஏக்கங்கள் ததும்பிச் சோரும் நேரங்களில்,
முன்னங்கால் நெஞ்சமர்த்தி
நெற்றி முத்தமிடுகையில்,
முனகல்  சத்தமிடுகையில்,
ஒன்று மட்டும் எண்ணத் தோன்றும்
தனிமை என்ற சொல்லை
தமிழ் அகராதிகள் தனிமைப்படுத்த வேண்டும் என்று...
நாய்கள்தாம் இருக்கின்றனவே
யார் உன்னை அநாதை என்றது ?

◇ **கதிரிளவன் இரவிக்குமார்**



புயலைப்போல் கடந்தபடி இருக்கும் வார்த்தைகளின்
வீதி ஓரம்
ஒரு சொல் கண்ணை மூடியபடி மௌனமாக
அமர்ந்திருக்கிறது..
புழுக்கமாக இருக்கும் என் வீட்டை பூட்டிவிட்டு
அமைதியாக அதன் அருகில் போய் அமர்ந்து
கொண்டேன்....!

◇ **க.ராஜகுமாரன்**

எதிர்பாராத திருப்பத்தில்
மோதுகிற நெருக்கத்தில்
தோன்றியவரை
நானறியேன்
அவரும் என்னை அறிந்திருக்க சாத்தியமில்லை
புன்னகை தெளித்து நகர்ந்தவரை
பதில் புன்னகையோடு
கடந்து வந்துவிட்டேன்
காரணமற்று
இந்தக் கவிதையில்
நுழைந்த அவரை
நீங்களும் கடக்கக் கூடும்
பிறிதொரு திருப்பத்தில்..

◇ **ரத்னாவெங்கட்**

# உயர்த்தும் நாற்று



உடல் வளைந்து நடுபவர்களை
விளைச்சலால் உயர்த்திவிடுகிறது,
நெல் நாற்று.

◇ **ஆ.சார்லஸ்**

ஒவ்வொரு அலைகளையும்
கொஞ்சம் கொஞ்சமாய்
பிடித்து வைக்க முயலுகிறாள்
பிடி மண்ணில் ஈரமாய்....

இப்பொழுது கடல் சற்றுக்
குறைந்து போயிருக்கும் என்பது பப்புகுட்டியின்
நம்பிக்கை....

அள்ளக் குறையா அன்பில்
கடலும் தாய்மையும் ஒன்றுதானே....

பப்புக் குட்டிக்கும் புரியும் நிச்சயம்
ஒருநாள்..!!

ஆதவனின் தோன்றல் அட்ஷயப்பாத்திரம் என்று....

◇ **ஜனனி**



அந்தப் பூக்கடைக்காரர்
மணமாலை கட்டி முடித்த கையோடு
மலர்வளையம் தொடுக்கிறார்!
புன்னகை மாறாது புத்தனாகியிருந்தது
உற்றுநோக்கும்
உதிரிப்பூக்கள்!

◇ **நா.கி.பிரசாத்**

என்னைத் தொடராதே
சிறு பொறி காடு புசிக்கும் தழல்
என் கோபம்
கழிமுகம் காத்திருந்து
சுனை விழுங்கும் கடல்
என் ஆதங்கம்
கலப்பால் கெடுக்கும் துளிவிடம்
என் வன்மம்
பெருமழை கலங்கும் செம்புலம்
என் கழிவிரக்கம்
காடுகொள்ளா சில்வண்டின் அலறல் என்
பிலாக்கணம்
தலை துரத்தும் கதண்டு திரள்
என் காதல்.

◇ **காயத்ரி ராஜசேகர்**



மரத்திலிருந்து விடுபட்டு
காற்றில் சுழன்றுதிரும்
சிறிய பூவைப் பார்க்கிறேன்

மரணம் என்பது
இத்தனை
அழகாக இருக்குமா.

◇ **மழைக்குருவி**

அறுபது வருட பாரம்பர்ய
இதழில் கவிதை
வந்திருக்கிறது..
எத்தனை பேர் படைப்பை
படித்திருப்பார்கள்..
அங்கீகார அடையாளம்
சுகப்பிரசவ குழந்தை
மகிழ்ச்சியில் மிதக்க துவங்கினேன்
உலகம் தட்டாமாலை ஆடியது
கருப்பு வெள்ளை கனவுகள்
வண்ணமாக கூடு பாய்கிறது
மகிழ்ச்சியின் உச்சத்தில்
எல்லோரிடமும் பகிர்கிறேன்
பெரும்பாலும் எல்லோரும் கேட்ட
ஒரே கேள்வி..
எவ்வளவு பணம் கிடைக்கும்..

◇ **ச.ஆனந்தகுமார்**

# அறையும் திறவுகோலும்



ஒரு வீட்டுக் கதவை திறப்பது போல
மனதை திறக்க முடிவதில்லை
திறவுகோல் என்று திடமான ஒன்றில்லை
ஒரு கடவுச்சொல்லோ
துருப்பிடித்த இரும்புச் சாவியோ கூட இல்லை

அறை அனுப்பும் ஒரு சமிக்ஞை தான்
அப்போதைக்கப்போதைய
திறவு கோல்

இருளில் விழுந்து முட்டிக்கொள்ளப்போகிறாயோ
வெளிச்சத்தில் விழுந்து
மிதக்கப் போகிறாயோ
எந்த உத்தரவாதமுமில்லை

போகிறவன் தான் வரப்போகிறானா
அல்லது
வராமலே போகப்போகிறானா
என்பதற்கும்
எந்த நிச்சயமும் இல்லை

எங்கே எவ்விடத்தில
அறையை சுமந்து கொண்டு
அவன் அலைகிறானோ
அல்லது அறைதான்
அவனை சுமந்து கொண்டு அலைகிறதோ
யார் கண்டது?

◇ **தங்கேஸ்**



உப்பின் அடர்த்தி அதிகமாகிறது
கண்குப்பியில் அடைத்த
கடலுக்கு

◇ **பூங்கோதை கனகராஜன்**

இரவு மழைக்கு மரங்கள்
நனைந்து இருக்கின்றன
நீண்ட நாள் இலைகளில்
அப்பிக்கிடந்த அழுக்குகள்
சுத்தமாக கழுவப்பட்டிருக்கின்றன
அதிகாலை சூரிய தரிசனத்தில்
வண்ணத்துப்பூச்சி இறகுகளாய்
இலைகளில் புத்துணர்ச்சி
புதிதாய் பூத்த பூவொன்றில்
வழக்கத்தை விட கூடுதல் கவர்ச்சி
துன்பங்களை கலைந்து துளிர்க்கும்
வாழ்க்கை கூட இப்படிதான்
பேரழகுகள் நிறைந்தவைகளாக
இருக்கும்.

◇ **க. அய்யப்பன்**

# அந்த மூன்று நாள்



விடியல் பல இருப்பினும்
இந்தவிடியல் புதுமையே
அறுமணிக்கு எழுந்தவள்
ஐந்துக்கே எழுகை
ஆர அமர துவைத்தவள்
விடியுமுன்னே குளியல்
இரு நாள் யதார்த்த குளியல்
கடைசிநாள் எல் எண்ணெய் கொண்ட குளியல்...
மூன்று நாள் கழிந்து
மிட்சமிருக்கிறது
வலியும்
ஒரு ரூபாய் சியக்காயும்....

◇ **சே கார்கவி கார்த்திக்**

அதிகாலையில்
குழந்தைகள் தூங்கி
விழிப்பதற்கு முன்னே
வேலைக்குச் சென்று
தூங்கிய பின் இரவில்
வீட்டுக்குள் நுழையும்
தருணத்தில்
பிள்ளைங்க சாப்ட்டாங்களா என்ற
கேள்வியின் பதிலில்
பசியாறிவிடுகின்றனர்
அப்பாக்கள்...

◇ **நேசன் மகதி**

# அம்மாவின் கைபேசி



அம்மா கையில்
நோக்கியா பட்டன்
அலைபேசி
என்றால்
மகனோ, மகளோ,
அடுத்த தெருவில் இருக்கிறார்கள்!
என்று அர்த்தம்

ஆண்ராய்டு
என்றால்
வெளியூரில்.

ஆப்பிள்
ஐ போன்,
என்றால்
வெளிநாட்டில்...

அம்மா கையில்
*பேரனோ*,
*பேத்தியோ*
இருந்தால்
*பூலோக*
*சொர்க்கத்தில்*
நாம் அனைவரும்
இருக்கிறோம்
என்று அர்த்தம்.

பேராண்டிகளே
அம்மாவின்
அற்புத கைபேசிகள்.

◇ **நரேன்**

# சமன்களின் சாத்தியம்



கைக்கொள்ளப்பட்ட
எழுதப்படாத
நியாய தருமங்களின்
வழித் தடத்தில்
இன்னமும் இன்னமும்
நெடிது நீள்கின்றன
எனது
பயணச் சறுக்கல்கள்

கையளிக்கப்பட்ட
வாழ்க்கையின் கடினத்தை
எவரிடத்தும் ஒப்புவிக்க
இசையாத நெஞ்சகத்தில்
இறுமாப்பு மட்டுமே
இன்றளவும் கவசத் துணையாக

ஒப்புக் கொடுத்தலுக்கும்
ஒப்புக் கொள்ளுதலுக்குமான
சமன்செய்தலென்பது
விருப்பப் படிநிலைகளின்
கையளிப்பில் மட்டுமே
சாத்தியம்

இருந்தும்...

எனது பயணத்தில்
எனக்கான பாதையின்
நீள அகலங்களின்
வரைவுகளை
தப்பிதமாக
வடிவமைத்துக் கொடுத்தவனிடமே
கரங்களைக் கூப்புகிறேன்
சமன்செய்தலுக்காக

கடந்த காலக் காயங்கள்
மனத்தின்கண்
முத்திரை பதித்து
வலிகளின் ஏகோபித்தலை
நிலைநிறுத்தி நிற்கின்றன
இன்றும்
மாறா வடுக்களாக

◇ வானதி சந்திரசேகரன்

# அவளின் அவள்



சூசகமாய்
விருப்பத்தை சொன்னாய்
புரிந்தும் புரியாதது போல
முகம் சுளிக்கிறேன்
அலைபேசி எண் கேட்டாய்
உடனே மறுக்கிறேன்
சிரித்துக்கொண்டே
எனது எண்ணை
நீயே சொல்கிறாய்
அறம் தவறி சேமித்ததற்கு
கோபமாய் முறைத்து
கடக்கிறேன்
வீட்டில் எல்லோரும் இருக்கும் நேரம்
அலைபேசி அடிக்கிறது
அது நீயாக இருக்கக்கூடாது எனவும்
நீயாக இருக்கவேண்டும் எனவும்
ஒரே நேரத்தில் இங்குமங்கும்
பெண்டுலம் ஆடுகிறது
அறைக்கதவை தாழிட்டு
நீயறியாமல் சேமித்த
உன் எண்ணை நோக்கி
முதல் முறையாய்
விரல்கள் நகர்கிறது...!

◇ சந்துரு ஆர்.சி

# காதலித்துப் பார் !



விரல்களின்
நுனிகளிலும்
சிறகுகள் முளைக்கும்

இமைகளை
மறந்து
விழிகள் விரிந்திருக்கும்

பாதங்களுக்குக் கீழ்
ஓர்
பூந்தோட்டம் தொடர்ந்து வரும்.

ஆழ்மனதில்
தினமும்
அகழ்வாராய்ச்சி நடக்கும்

நீர்த்துளியிலிருந்தும்
மேகத்தைப் பிரித்தெடுக்கும்
மந்திரம் புலப்படும்

வார்த்தைகள்
வலுக்கட்டாயமாய்
வெள்ளையடிக்கப்படும்

சுவாசிக்க மறந்து
நாசிகள்
நங்கூரமிடும்

நயாகராவின்
நீர்ச்சரிவும்
நிசப்த மண்டபமாகும்

உயிருக்குள்
ஓர்
உருக்காலை உற்பத்தியாகும்

மனசுக்குள் நிதமும்
மரங்கொத்தி
அலகுபதிக்கும்

பாதங்களின்
சுவடுகளில்
பாதைகள் அறிமுகமாகும்

பகல்கள் முழுதும்
கனவுகளில்
கரையும்

இரவுகள் முழுதும்
காலுடைந்த
நத்தையாய் நகரும்

செல்பேசி
சத்தங்களில்
சிம்பொனி தெறிக்கும்

இமெயில்
வரிகளில்
இலக்கியம் பிறக்கும்

காதலித்துப் பார் !

◇ **ஹபி**



போதி மரத்தடியில்
சாய்ந்தால் ஞானம்
வரும் என்று எண்ணும்
போலி மகான்களே
எதைத்தான்
தேடுகிறீர்கள்....

உங்கள் அடுப்பு மேட்டில் உறங்கி
கிடக்கும் பூனையை
கூட காணாது
அடுத்தவர் வீட்டில்
இன்னும் எதை
தேடுகிறீர்கள்....

நீங்கள் நினைப்பது போல்
பெண்கள் ஒன்றும் உங்கள் வீட்டு கிள்ளு கீரையல்ல...

கருவிலே கர்ம வீரரையும்...
உருவிலே
மகா கவியையும்...
வீரத்திலே
வீரபாண்டியனையும்
பெற்றெடுத்தவர்கள் நாங்கள்...

கருக்கொண்ட தீ
உறையும் மீண்டும்
அத்தீக்குள்ளேயே...
பொத்திய அன்பின்
பௌத்திர பொதியது..

மிடுக்கற்ற கர்வமற்ற
திமிரற்ற அன்பான
எள்ளுப்பூக்களே
நாங்கள் என்றும்
மறவாதீர்கள்...

◇ நிஷா ராஜேஷ்.



இப்போதுதான் தெரிகிறது
நீ இல்லாமலும்
நான் வாழ்ந்து விடுவேன்
எனச் சொன்னதெல்லாம்
எத்தனை பெரிய
அசுரப்பொய் என்பது...

உனைமறந்த என் நாட்குறிப்புகள்
பூக்காமலா போய்விடும் எனச் சொன்னதெல்லாம்
எத்தனை பெரிய அபத்தமென்பது...

உனையற்ற பொழுதுகளில்
நானென்ன ஒன்றுமில்லாதவனாகி விடுவேனா என்ன
?
என வினவிய வினாக்களெல்லாம்
எத்தனை நிற்சலனமானதென்று...

ஆம் .அன்பே இப்போது ஒப்புக் கொள்கிறேன்
உன்னையும் ,உன் வார்த்தைகளையும்...

இவ்வாழ்வின்
பொக்கிசங்களெல்லாம் விரலிடுக்கில் இருக்கும்வரை
பொக்கிசமாய்த் தெரிவதில்லை.,

தவறவிட்ட பின்பே தெரியும் உனைப்போல.

◇ **இனியவன் காளிதாஸ்**



தேங்கிக் கிடக்கும் பசியினைக்
கைமாற்றிக் கொள்ளும்
வழி அடைந்து கிடக்க
இழுத்துச் செல்கிறது வாழ்வின்
எந்தக் கண்ணியிலும் ஊடாடும்
பிம்பங்களைப் பிடித்து
நிரப்பிக் கொள்ளும் பாழும் வயிறு
இறப்பைக் கொஞ்சவோ வெறுக்கவோ
பாசை அறியாது வெறுத்துவிட்டது விழிகள்
வழியும் வியர்வையும் எரியும் உடலும்
எதை எதிர்பார்க்கிறதெனத் தெரியவில்லை
விட்டேத்தியான பாதத் தடங்கள் இலக்கேதுமின்றிப்
பதிகிறது காலத்தின்மேல்
எதையும் யாசிக்காத மனிதன் தானென்ற கர்வம்
தலைக்கேற ஏற
இப்போதெல்லாம் பசியை உண்ணும்
தகவமைப்பைப் பெற்றுவிட்டது உயிர்.

◇ **யாழ் தண்விகா**

உருட்டிய விழிகளோடு
மிரட்டும் பார்வையில்
எறிவதற்கு முன்பான கணம் ஈட்டியை ஒரு கையில்
பிடித்தபடி
மறு கையில் கடிவாளம் பற்றி
கம்பீரமாய் குதிரையில்
அமர்ந்திருக்கிறார் அய்யனார்
வண்ணத்துப்பூச்சியொன்று
அவரின் கன்னத்தில்
அமர்ந்துவிட்டுப் போகிறது
அடம் பிடித்தழும் குழந்தைக்கு பக்கத்தில் காட்டுகிறேன்
அச்சம் சிறிதுமின்றி
அய்யனாரின் மோவாயைக் கடித்து
எச்சில் அபிஷேகம் செய்கிறது குழந்தை
இப்போது தான் கவனிக்கிறேன்
அய்யனாருக்கு கனிவு மிளிரும் கண்கள்
சொன்னால் நம்பமாட்டீர்கள்
புத்தனின் அதே புன்னகை தான்
எங்கள் ஊர் அய்யனாருக்கும்

◇ **மகேஷ் சிபி**



என்னோடு ஐந்தாவது
படிக்கும் மருது
என் தாத்தனைப் பார்த்து
டேய் வீருமாண்டி
சாக்கடையை
நல்ல தோண்டிப் போடுடா
என்ற போது
எழுந்தது இந்தப் புரட்சி

என்சக வயது
சிறுபெண் தண்ணீர்
ஊற்ற,ஊற்ற
பாட்டி கைகளைக் குவளையாய்
மாற்றிக் குடித்தபோது
எழுந்தது இந்தப் புரட்சி

முடிதிருத்தம் செய்துவிட்டு
காசுக்காய்
மூலையில் வெகுநேரம்
என் அப்பன்
கைகட்டி நின்றபோது
ஏற்பட்டது இந்தப் புரட்சி

கால்மேல் கால்போட்டு
நீங்கள் அனைவரும்
நாற்காலியில் அமர்ந்தபடி
என் அம்மா
தரையில் குந்தியபடி
சலவைதுணியைத்
தந்தபோது ஏற்பட்டது
இந்தப் புரட்சி

எங்கள் கண்ணீரின்
விளைச்சலில்
எல்லோருக்குள்ளும்
ஒரு மாமன்னன்
எழுந்து நிற்கிறான்
நாளைய அடையாளமாய்

◇ **செ.புனிதஜோதி**



மோகன்கள் ஓய்வுபெறும் வயதில்
கார்த்திக்குகள் அரைநூற்றாண்டை நோக்கி

ரசிக்கமட்டுமேயான
எட்டமுடியாத அபூர்வங்கள்
சூப்பர் ஸ்டார்களும்
காதல் இளவரசன்களும் அரிதினரிது

தலைகளும் இ.தளபதிகளும் அவர்களுக்கு
முன்பிருந்தே இருக்கிறார்கள்

அவ்வப்போது காணக்கிடைக்கிற
தனுஷ் சிலம்பரசன்கள் தொண்ணூறுகளின்
அப்பாவிக் குழவிகள்

யு குழாய்க்குள் குடைந்து கொண்டிருக்கும் சிற்சிலரில்
கவின்கள் ஹரிஷ்கள்

எண்பதுக்குக் கீழ் எல்லா வயதிலும் இருக்கிறார்கள்
இளையராஜாக்கள்

◇ **சுசித்ரா மாரன்**

# வீட்டிற்குள் நுழைந்த வானம்



பட்டம் விட்டு
விளையாடிக்கொண்டிருக்கும்
சிறுவர்கள் வீடு திரும்புகையில்
மறக்காமல் எடுத்துக்கொண்டு
வந்துவிடுகின்றனர்
அவர்களின் வானத்தையும்

◇ **சீ. பாஸ்கர்**

பெரும் கூட்டில்
அடைபட்ட சிறிய
தத்தம்மை போல்
நாவடங்கி உண்டி சிறுத்து விதிபடுத்தும் பதியாகிட.....
பெருங்குடலில்
வலியெடுக்க
சங்கு பிடறியாய்
உறவுகள் நெருக்கிட
தாயுறவு ஏங்குமாே
என் தவிப்பை கண்டால்.....
வாய் மௌனம் தான்
வாழ்வென மார்தட்டி
அமுங்கியே வாழ்கிறேன்
கள்ளி பூக்கள் நடுவே தாயுமானவளாய்.....

◇ **அ.ராஜ்குமார்**



சில பிரிவுகள்
மொழியில்லாது போய்விடும்

சில கையசைப்புகள்
பேச்சின்றியே நடக்கும்

சில காணாமல் போதல்கள்
கண்டுகொள்ளப்படாமலே இருக்கும்

சில கண்ணீர்த்துளிகள்
வழித்தடம் மறந்துவிடும்

சில காயங்களின் தழும்புகள் இல்லாமல்
மறைந்துவிடும்

சில கேவல்களின் ஒலி
யாருக்கும் கேட்காது

சில மௌனங்களின் வலி
யாருக்கும் தெரியாது

சில ரணங்கள் புன்னகைகளாகவும்
கடந்து விடும்

அவ்வளவு இலகுவாக
மறந்தும்
மறைந்தும்
கடந்தும்
விடும் எல்லாம்
இலகுவாக
உருவானவையா
என்றால்,
இல்லையென்பதே
பெரும் உண்மை!

◇ Dr ஜலீலா முஸம்மில்
இலங்கை



ஒரு பெண்ணை
காதலிப்பதென்பது
ஒரு பட்டாம்பூச்சியை வரவேற்க
தோட்டம் போட்டு
செடி நட்டு பூ வளர்த்து
காத்திருப்பது

ஒரு பெண்ணை
காதலிப்பதென்பது
கைகளை நீட்டும்போது
தூக்கி கொஞ்சி
கால்களை உதறும்போது
இதமாக இறக்கி விட்டுவிடுவது

ஒரு பெண்ணை
காதலிப்பதென்பது
அவள் கனவிற்குள் நுழைவதற்கான கதவங்களை
தட்டிக்கொண்டிருக்காமல்
அவள் மனதிற்குள்
இடம்பிடிக்கும் சாத்தியங்களை
கண்டறிவது

ஒரு பெண்ணை காதலிப்பதென்பது
அவளை சதா காதலித்து
துன்புறுத்தாமலிருப்பது

ஒரு பெண்ணை காதலிப்பதென்பது
அவளோடு சேர்த்து
அவளுக்கு பிடித்த
சகலத்தையும் காதலிப்பது

ஒரு பெண்ணை
காதலிப்பதென்பது
அவள் அருகில் இருக்கும்போதே
அவள் புகைப்படத்தை
முத்தமிடுவது

ஒரு பெண்ணை
காதலிப்பதென்பது
கணக்குப்பாடத்தை
படித்துவிட்டு
உயிரியல் தேர்வு எழுதப்போவது

◇ **செ.வீரமணி**

# நீயில்லாமல் நான்
# நானில்லாமல் நீ......



புலம்பல்கள் குறையும்
சண்டைகள் காணாமல் போகும்
அலைபேசி ஓய்வெடுக்கும்
கவிதைகள் கசக்கும்
கடிகாரம் தவழும்
வானம் வறண்டு போகும்
கடல் நீலமிழக்கும்
இளையராஜா கடுப்பேற்றுவார்
ஃபில்டர் காபி ஆறிகிடக்கும்
தன்னியல்புகள் தொலைந்து போகும்
உறக்கத்திலும் ஆழ்மனம் விழித்திருக்கும்
விழித்திருக்கையில் கவனம் தப்பும்
நாக்குகள் ருசி மறக்கும்
குரல்வளை ஒலியிழக்கும்....

இத்தனைக்கும் பிறகும்
பரஸ்பர திமிருடன்
சொல்லிக் கொள்வோம்
" Get Lost" ( தொலைந்து போ)

◇ **பிரபுசங்கர் க**



சிறுசிறு வில்லைகளாக உருட்டி
இன்றைய பொழுதுக்கு
இரண்டே இரண்டை மட்டும்
விழுங்கச் சொன்ன போது
இவ்வளவு கசப்பாக இருக்குமென்று நம்பவில்லை.

தொண்டைக்குழிக்குள் இறங்கவேயில்லை.
மூளை நரம்புகளில்
மின்னல் வெட்டி மறைந்தது.
நாக்கில் ஒரு நார் தட்டுப்பட்டது.

இனிப்பாக ஏதாவது கொடு என்றேன்.
அதுவும் கசந்தது.

என் கூச்சலில் அறையே அதகளப்பட்டது.

அப்போதைய என் முகபாவங்களை
ஒரு கண்ணாடி கொண்டு காட்டிய போது சத்தியமாக
சகிக்க முடியவில்லை.

விள்ளலில் சிந்திய கோபத் துணுக்குகளை
எந்த அருவருப்புமின்றி
என் கண் முன்னாலேயே அள்ளி
வெளியே போட்டாய்.

நூறு சதவீதம் சுத்தமாகிவிட்ட நம்பிக்கையில்,
கசப்புணர்வு
கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

இப்போது, நம் முத்தத்தின்
இனிப்பு கலந்த வாசனை அறை முழுவதும்.

◇ **மா. காளிதாஸ்**

# Let it Go..



நச்சுப் படர்கொடிகளாய்
வஞ்சக ஆன்மாக்களின் இருப்பு
செம்மறி ஆடுகளை
அணிந்து கொண்ட ஓநாய்கள்
பிரகாச முக இதயங்களில் இருளின் கறை
மெல்லிய தென்றலாக மாறுவேடமிட்ட புயல்கள்
பச்சோந்தி வண்ணங்களாய் நம்பிக்கை துரோகம்
உரத்த வார்த்தைகளில் இடியின் எதிரொலிகள்
அம்புகளைப் போலக் காயப்படுத்துவதே நோக்கம்
சண்டையின் சுவையை அனுபவிக்கும் மூடர்கள்
நண்பர்களென டமாரமாய்ப் புறம் பேசி திரியும்
ஏமாற்றுகாரர்களின்

பிடியை விட்டுவிட
இளைப்பாறுகிறது இதயம்.

◇ **பிரியா பாஸ்கரன்**

வெளாவி பதமா வச்சிருக்கேன் குளிச்சு வாப்பா எனும் ஆத்தா

சுடு காபி பதமாத்தான் இருக்கு குடிச்சுக்கப்பா எனும் ஆத்தா

சோத்த ஊதி ஊதி எனக்கு சுடுமுன்னு தட்டுல வைக்கும் ஆத்தா

செத்த பொறுத்து போப்பா வெய்ய தாழட்டும்னு சொல்லும் ஆத்தா

கொள்ளி வச்ச தீய எப்படி தாங்கியிருப்பா...?

◇ **கதிரவன் வீ**

# தொடக்கம்



எல்லாமே...............
ஒரு புள்ளியிலிருந்துதான் தொடங்குமென்றார்கள்
தொடங்கிய புள்ளி தொடர்புள்ளியானதுபற்றி
ஆய்வு செய்யவில்லை நான்

ஆனாலும் செய்யத்தூண்டுகிறது
பிறை நெற்றியில்
நிறையும் ஸ்டிக்கர் பொட்டு

ஒரு வனமும் வானமும்
கை குலுக்கிக்கொள்கிற
பச்சையத்திற்கு அடித்தளமிடுகிறாய்
வாசலில் நீயிட்ட கோலப்புள்ளியில்
கொட்டிய அரிசிமாவை
கொத்திக்கொண்டிருக்கிறது
சில பறவைகள்.

◇ **கா வெங்கடேஸ்வரன்**

எறும்புகளை துரத்திக்கொண்டிருக்கின்றன...
பூச்சிகள்,
பூச்சிகளை
துரத்திக்கொண்டிருக்கின்றன எலிகள்,
எலிகளை
துரத்திக் கொண்டிருக்கின்றன பூனைகள்,
பூனைகளை
துரத்திக்கொண்டிருக்கின்றன நாய்கள்,
நாய்களை
துரத்திக்கொண்டிருக்கிறார்கள்...
மனிதர்கள்,
வலியவர்கள் எளியவர்களை விரட்டிக்கொண்டிருக்கும்
பூமியில்,
எல்லோருக்கும்
ஒரே மழையைத்தருகிறது...வானம்!

◇ **மு.முபாரக்**

# நீயும் பாதி நானும் பாதி



பாதியுண்டு எறியப்பட்ட பழம்
பாதிமலர்ந்து செடி நீங்கிய மலர்
பாதி கலவியில் கலைந்த காமம்
பாதியில் முடிந்த விளையாட்டு
பாதியில் மூளியான சிற்பம்
பாதியில் நின்றுபோன கவிதை

இத்தனை பாதிகளின் ஏக்கத்தோடு
மீதியைத் தேடி
மீண்டும் மீண்டும்
நம்மைச் சுற்றி வருகிறது
பாதியில் வழி தொலைத்த காதல்

இப்படித்தான்
குறைந்தபட்சமாக
கவிதையாவது முழுமையடைகிறது.

◇ அ.சீனிவாசன்

# அவளுக்கும் வானுக்கும் ஆறு வித்தியாசங்கள்.....



வானில் நிலவொன்று...
அவள் வட்ட முகத்தில்
நிலவிரண்டு....

வானில் எண்ணிலடங்கா
நட்சத்திரங்கள்
அவள் முகத்தில்
ஒன்றிரண்டு
முகப்பருக்கள்....

வானில் பிறையொன்று
அவள் புருவங்களாய்
பிறையிரண்டு....

இளஞ்சிவப்பாய்
மாலைச்சூரியன்
அடர் சிவப்பாய்
அவள் நெற்றிப் பொட்டு....

கருமேகம் திரண்ட
மழைத்துளியால் கரையும்
மண்துகள்கள்
அவள் கருவிழி திரண்ட
இருதுளியில் கரையும்
இரத்த நாளங்கள்.....

நிலவற்ற நாளில்
இருளும் உலகம்
அவள் நினைவற்ற
நாளில் இருளும்
இதயம்......

◇ நித்யா

# மழை



அதிக மழை
குறைவாக நனைந்தது
குடைக்குள் சேலை.

மழைவரும் போதெல்லாம்
சூடு பிடிக்கிறது
தேனீர் வியாபாரம்.

பெருமழை
அடையாளம் தெரிந்தது
குளத்தின் பரப்பளவு.


கொஞ்சம் மழை
நிறைய ஆசை
காகித கப்பலுடன் குழந்தை.

சிதறி வாழும் மழைத்துளி
ஒன்றாக சேர்ந்தது
ஊர்க் குளத்தில்.

கை விடப்பட்ட கிணறு
புதுப் பொலிவுடன்
கோடை மழை

தாமரை இதழில்
தவழுகிறது
தாவிவந்த தவளை.

◇ **மூக்கையா மணி திருமுருகன்**



வலியை நிறைய அழுகையோடு சொல்லுவாள் அம்மா

எவ்வளவு வலித்தாலும் அக்காவுக்கு விசும்பல் தான்
வரும்.

வீட்டை விட்டு வெளியேறி
வலியை துரத்த அப்பாவிற்கு
மட்டுமே தெரியும்

எல்லாம் தெரிந்தாலும் என் வலி
மவுனம் தாண்டி
வெளியே வருவதில்லை

யார் சொன்னது வலி
எல்லோருக்கும் ஒன்று தான் என்று..

◇ **முத்து ஜெயா**

தூங்கும் பெண்
பொம்மையின் அரவணைப்பில்
குழந்தையில்லாத வீடு

குழந்தையின் பாசம்
கூடுதல் மையுடன்
பொம்மை

உறவுகள் சூழ்
பல்வேறு பொம்மைகள்
தனிமையில் விளையாடும் குழந்தை

◇ **ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**



அடுத்த கணம் நோக்கிய
எதிர்பார்புக்களுடன் நகர்கிறது வாழ்க்கை

நாளையும்
பிழைத்திருக்க வேண்டுமென
அசாதாரண உருவங்களை சுமந்துகொண்டு ஜீவிக்கத்
துணியும் பிறவியாய்

அன்பு இறந்துவிட
நேற்றைய சேதிகளை மட்டும் கொண்டாடித் தீர்க்கும்;
காலக் கணிதத்தின் வலிய நசுக்குதல்கள் ஆங்காங்கே

இறுதிக் கண்ணீரைச் சமர்பித்து
இரங்கலொன்றை ஓதும்
காணாமலான மானுட
விண்ணப்பங்களே
ஏராளக் கனவுகளின்
அளவுகோல்களென்றாக

ஆசையின் திசைகளில்
இன்னுமின்னும் சாதிக்க நிரப்பும்
அளவீடாகவே
கூட்டலும் கழித்தலுமான
உறவுகளின் கூடங்கள்

◇ **வானம்பாடி**

தற்பொழுது பொழிவது எனக்கான மழை

பெருமழையில்
நனையாமல் அம்மாவின்
சேலையில் அடைகாக்கப்பட்ட
பால்யம்

காய்ந்த துணிகளை
பத்திரப்படுத்தியே
விபரம் தெரிந்து
தவற விட்ட மழை

பக்கத்து வீட்டுபாட்டியின்
புலம்பல்கதையின்ஊடே
கழிந்தது பருவமழை

தற்கோண்டான் பேணி
சொற்காத்தத்தில் உருண்டு ஓடியது
புகுந்தகத்து மழை




குடையோடு விரல் பிடித்து
பள்ளியில் தொடங்கி
வளர்ந்து ஆளானது
தாய்மை மழை..

அலுவலகத்தில் உறவினர்கள்
இல்லத்தில் மழை பொழிந்த
நாட்களில் நான் மட்டும்
காணாமல் போனேன்

எல்லோருக்குமாக பொழிந்து
சோர்வும் துயரமும்
வடிந்த நிலையில்
மீதமுள்ள மழை

எல்லாம் கடந்து
நிற்கக்கூடிய மதியத்தில்
தொடங்கியே விட்டது
எனக்கான மழை.

◇ **யாழ் எஸ் ராகவன்**


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI